# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069078

1. District : DVAC Chennai — PS: Chennai City-III — Year: 2026 — FIR No.: 02 — Date: 25.08.2026
   மாவட்டம் — காவல்நிலையம் — ஆண்டு — மு.த.அ. எண் — நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 [As amended in 2018] — Sections பிரிவுகள்: 07
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: BNSS Act — Sections பிரிவுகள்: 106 [Sec. 102 Cr.P.C]
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : — Date from : — Date to : 24.08.2026
   குற்ற நிகழ்வு நாள் — நாள் முதல் — நாள் வரை
   Time Period : — Time from : 16.00 Hrs. — Time to : 20.30 Hrs.
   நேர அளவு — நேரம் முதல் — நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 25.08.2026 — Time : 12.30 Hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) — Time : 25.08.2026 @ 15.00 Hrs.
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — நேரம்

4. Type of Information : Written/ Oral : Written Typed
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Around 5 Kms. South West
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : — (b) Address : TANGEDCO [33/11 KV Sub-Station] office, Nangenallur, 100 feet Road, Near Sankara Eye Hospital & Hindu Mission Hospital
   முறைக் காவல் எண் — முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : Chennai-600 061
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. SAMY
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
   (b) Father's/ Husband's Name :
   தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : — (d) Nationality : Indian — (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : — Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Dy. Tahsildar / Spl. District Rev. officer [LA] office — (g) Address : Special District Revenue Officer [LA] office, Highways, Chengalpet District.
   தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) Tr. Kalidoss, Asst. Executive Engineer, 33/11 KV Sub-Station TANGEDCO, Nangenallur, 100 Feet Road, Chennai-61
   (2) Tr. S. Selvaraj, Commercial Inspector, O/o Asst. Engineer (O&M) 33/11 KV Substation, Nangenallur, 100 feet Road, Chennai-61

8. Reasons for delay in reporting by the complainant / Informant: — No delay —
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : Cash Rs. 59,700/-
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Informed to the Complainant — S. Vallinayagam 25/08/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

25/08/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் (S. VALLINAYAGAM)
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்
VLAC, CC-III UNIT
CHENNAI-600016

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-3 குற்ற எண்.02/2026 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு</u>

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) அவர்களின் செயல்முறைகள் எண்.ந.க.1136-2024-அ1, நாள் 24.08.2026 உத்தரவின்படி செங்கல்பட்டு மாவட்டம், மாநில நெடுஞ்சாலைகள், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணியாற்றும் திரு.சாமி அவர்களும் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3 காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர் ஆகியோர் இணைந்து 24.08.2026-ந்தேதி சென்னை-61, நங்கநல்லூர், 100 அடி சாலை, சங்கர் கண் மருத்துவமனை மற்றும் இந்து மிஷன் மருத்துவமனை அருகில் இயங்கி வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (33/11 KV Sub-Station) அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை தொடர்பாக மேற்சொன்ன செங்கல்பட்டு மாவட்டம், மாநில நெடுஞ்சாலைகள், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணியாற்றும் திரு.சாமி அவர்கள் 24.08.2026ந்தேதியிட்ட அளித்த புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, புகார் மனுவின் சாரம்சம் குறித்தும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக உயர் அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தெற்கு சரகம் (பொறுப்பு) சென்னை மாநகர சரகம் அவர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் நங்கநல்லூர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை தொடர்பாக

பதிவு செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளில் கணக்கில் வராத பணம் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அறிவுறுத்தியதின்பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-3 குற்ற எண்.02/2026 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 மற்றும் BNSS பிரிவு-106 (பிரிவு 102 Cr.P.C.) ஆகிய பிரிவுகளின் கீழ் இன்று 25.08.2026ந்தேதி பகல் 1.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.சாமி, துணை வட்டாட்சியர், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) அலுவலகம், மாநில நெடுஞ்சாலைகள், செங்கல்பட்டு மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர், சென்னை நகரப்பிரிவு-3, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. ந.க.1136-2024-அ1, நாள் 24.08.2026 அய்யா, பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-61, நங்கநல்லூர், 100 அடி சாலை, சங்கர் கண் மருத்துவமனை மற்றும் இந்து மிஷன் மருத்துவமனை அருகில் இயங்கி வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (33/11 KV Sub-Station) அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை நாள் 24.08.2026-ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக. செங்கல்பட்டு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் துணை வட்டாட்சியர், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) அலுவலகம், மாநில நெடுஞ்சாலைகள், செங்கல்பட்டு மாவட்டம் ஆகிய நான் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, காவல் ஆய்வாளர் மற்றும் அவரது குழுவினர் இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 24.08.2026ந்தேதி மாலை 4 மணி முதல் இரவு 8.30 மணிவரை சென்னை-61, நங்கநல்லூர், 100 அடி சாலை, சங்கர் கண் மருத்துவமனை மற்றும் இந்து மிஷன் மருத்துவமனை அருகில் இயங்கி

வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (33/11 KV Sub-Station) அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கையின் போது கணக்கில் வராத பணம் ரூ.59,700/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் கூட்டு சோதனையின் போது தயார் செய்யப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் பணம் ரூ.59,700/- இத்துடன் பெறப்பட்ட மேற்சொன்ன அலுவலகத்தில் பணிபுரியும் திரு.காளிதாஸ், உதவி செயற் பொறியாளர் மற்றும் திரு.செல்வராஜ், வணிக ஆய்வாளர் ஆகிய அலுவலர்களின் வாக்குமூலங்கள் ஆகியவை உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி இருதுறை கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் தங்கள் உண்மையுள்ள ஒப்பம் xxx 24/8/2026 துணை வட்டாட்சியர், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) அலுவலகம், மாநில நெடுஞ்சாலைகள், செங்கல்பட்டு மாவட்டம் இணைப்பு- மேற்கண்டவாறு

Sir, Received this complaint on 24.08.2026 and after getting concurrence from the higher officials of Directorate of Vigilance and Anti-Corruption, this day (25.08.2026) at 13.30 hrs, I am registering a case in V&AC Chennai City-III Crime No.02/AC/2026/CC-III U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 and Section 106 of BNSS Act (Section 102 Cr.P.C.) and taken up for investigation Sd/-(S.VALLINAYAGAM), Inspector of Police, Chennai City-III Unit, Vigilance & Anti-Corruption, Chennai-16 (25.08.2026).

**திடீர் கூட்டு தணிக்கை செயல்முறை நடவடிக்கை**

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) அவர்களின் செயல்முறைகள் எண்.ந.க.1136-2024-அ1, நாள் 24.08.2026 உத்தரவின்படி செங்கல்பட்டு மாவட்டம், மாநில நெடுஞ்சாலைகள், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக

பணியாற்றும் திரு.சாமி மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர் ஆகியோர் இணைந்து, இன்று 24.08.2026-ந்தேதி மாலை 4.00 மணியளவில் சென்னை-61, நங்கநல்லூர், 100 அடி சாலை, சங்கர் கண் மருத்துவமனை மற்றும் இந்து மிஷன் மருத்துவமனை அருகில் இயங்கி வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (33/11 KV Sub-Station) அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு தணிக்கை அறிக்கையின் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் | | திரு.சாமி,<br>துணை வட்டாட்சியர் /<br>தனி மாவட்ட வருவாய் அலுவலர்<br>(நிலம் எடுப்பு) அலுவலகம்,<br>மாநில நெடுஞ்சாலைகள்,<br>செங்கல்பட்டு மாவட்டம். |
| | | திரு.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சென்னை நகரப்பிரிவு-3,<br>ஊழல் தடுப்பு மற்றும்<br>கண்காணிப்புத்துறை, ஆலந்தூர்,<br>சென்னை-16. |
| | | திரு.ஆர்.மூர்த்தி,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>சென்னை நகரப்பிரிவு-3,<br>ஊழல் தடுப்பு மற்றும்<br>கண்காணிப்புத்துறை, ஆலந்தூர்,<br>சென்னை-16. |

சென்னை-61, நங்கநல்லூர், 100 அடி சாலை, சங்கர் கண் மருத்துவமனை மற்றும் இந்து மிஷன் மருத்துவமனை அருகில் இயங்கி வரும் நங்கநல்லூர் தமிழ்நாடு மின்

உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (33/11 KV Sub-Station) அலுவலகத்தில் பணியாற்றும், உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் இதர அலுவலர்கள், நங்கநல்லூர் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கான உரிய அரசுப்பணியை செய்வதற்கு லஞ்சம் வாங்குவதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில் செங்கல்பட்டு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையின் பேரில் செங்கல்பட்டு மாவட்டம், மாநில நெடுஞ்சாலைகள், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணியாற்றும் திரு.சாமி ஆகிய நான், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3, காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் இணைந்து மேற்சொன்ன சென்னை-61, நங்கநல்லூர், 100 அடி சாலை, சங்கர் கண் மருத்துவமனை மற்றும் இந்து மிஷன் மருத்துவமனை அருகில் இயங்கி வரும் நங்கநல்லூர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (33/11 KV Sub-Station) அலுவலகத்தில் அலுவலகத்தில் இன்று 24.08.2026-ந்தேதி மாலை 16.00 மணியளவில் இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2) சென்னை-61, நங்கநல்லூர், 100 அடி சாலை, சங்கர் கண் மருத்துவமனை மற்றும் இந்து மிஷன் மருத்துவமனை அருகில் இயங்கி வரும் நங்கநல்லூர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (33/11 KV Sub-Station) அலுவலகம் கிழக்கு மேற்காக செல்லும் 100 அடி தெருவில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி அலுவலகமானது இரண்டு தளங்களை கொண்டதாக உள்ளது. மேற்படி கட்டிடத்தின் தரைத்தளத்தில் உள்ள நுழைந்தவுடன் நங்கநல்லூர் (33/11 KV Sub-Station) கன்ட்ரோல் ரூம் அமைந்துள்ளது. அதனை தொடர்ந்து

முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுகளும், அதனை தொடர்ந்து முதல் தளத்தின் உதவி பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம், நங்கநல்லூர் அவர்களின் அலுவலக அறை மற்றும் உதவி செயற்பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம், நங்கநல்லூர் அவர்களின் அலுவலக அறையும் காணப்படுகிறது. முதலாவதாக உதவி செயற்பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு), அவர்களது அலுவலக அறையில் உள்ளே நுழைந்ததும், அங்கே இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் காளிதாஸ் என்றும் இந்த அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் செங்கல்பட்டு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் பரிந்துரை செய்யப்பட்ட தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணியாற்றும் திரு.சாமி ஆகிய நான், என்னையும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3 காவல் ஆய்வாளர் மற்றும் அவரது குழுவினரையும், அறிமுகம் செய்து கொண்டு, சென்னை-61, நங்கநல்லூர், 100 அடி சாலை, சங்கர் கண் மருத்துவமனை மற்றும் இந்து மிஷன் மருத்துவமனை அருகில் இயங்கி வரும் நங்கநல்லூர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (33/11 KV Sub-Station) அலுவலகத்தில் திடீர் சோதனை செய்ய உள்ள விவரம் தெரிவிக்கப்பட்டது. உதவி செயற்பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு), அவர்களது அலுவலக அறை சோதனை மேற்கொள்ளப்பட்டது. உதவி செயற்பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு), திரு.காளிதாஸ் என்பவர் தனது இருக்கையில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்தார். அவரது அலுவலக அறையிலிருந்த மேஜையின் மேலே acer desktop computer மற்றும் hp laserjet MP136 என்ற multi purpose printer மற்றும் அலுவலக

கோப்புகள் காணப்படுகிறது. அந்த மேஜையை சோதனை மேற்கொண்டதில் அலுவலக கோப்புகளுக்கு இடையே வெள்ளை நிற கவரில் பணம் கத்தையாக பாதி வெளிப்புறமாக தெரியும் வகையில் காணப்பட்டது. அந்த வெள்ளை நிற கவரிலிருந்து கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணி பார்த்தபோது பணம் ரூ.50,000/- (Rs.500X100 Nos.) காணப்பட்டது. அந்த பணம் ரூ.50,000/- குறித்து உதவி செயற்பொறியாளர் திரு.காளிதாஸ் அவர்களிடம் கேட்டபோது, அவர் பதட்டமடைந்தும், பதில் எதுவும் கூறாமல் தலை குனிந்தவாறு மௌனமாக இருந்தார். மேலும் அவரது அலுவலக அறையின் மேஜையில் காணப்பட்ட மேற்சொன்ன பணம் ரூ.50,000/-த்திற்கு எந்த ஒரு ஆதாரமும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் அவர் சில மணிநேரம் கழித்து அந்த பணம் ரூ.50,000/- குறித்து தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்று கொள்ளும்படி இல்லாததால், பணம் ரூ.50,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது பேண்ட் வலது பக்க பாக்கெட்டில் இருந்து பணம் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.22,000/- (Rs.500X44 Nos.) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது சென்னை மடிப்பாக்கத்தில் உள்ள தனது உறவினர் ரோஸ்லீன் அவர்களிடமிருந்து செலவினத்திற்காக பணம் ரூ.25000/- வாங்கியதாகவும், அதில் செலவினம் போக பணம் ரூ.22,000/- இருப்பதாக கூறியதை தொடர்ந்து, அவர் கூறிய உறவினர் திருமதி.ரோஸ்லீன் அவர்களை அவரது செல்போன் எண்ணில் (8667380408) தொடர்பு கொண்டு அந்த பணம் ரூ.25,000/- குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் கடந்த 21.08.2026ந்தேதி நங்கநல்லூரில் உள்ள ICICI பேங்க் ஏ.டி.எம் டெபிட் கார்டு மூலம் பணம் எடுத்து, தனக்கு தெரிந்த நபரான திரு.காளிதாஸ் அவர்களுக்கு பணம் ரூ.25000/- கொடுத்தாக அவர் கூறியதை, அது

தொடர்பான குறுஞ்செய்தி மூலம் உறுதி செய்யப்பட்டு, அந்த பணம் ரூ.22,000/- உதவி செயற்பொறியாளர் அவர்களிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் உதவி செயற்பொறியாளர் அவர்களின் அலுவலக அறையில் உள்ள அவரது டேபிளின் வலது பக்க டிராயர்கள், மற்றும் கிழக்கு நோக்கி காணப்பட்ட பச்சை நிற இரும்பு பீரோ ஆகியவற்றிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும் திரு.காளிதாஸ் அவர்களை விசாரித்தபோது, அவர் இந்த அலுவலகத்தில் கடந்த 31.12.2024 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவர் கடந்த 05.01.2008ந்தேதி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி பொறியாளராக நீலகிரி மாவட்டம், குந்தாவில் பணியில் சேர்ந்ததாக தெரிவித்தார். தற்போது சென்னை-117, எஸ்.கொளத்தூர், லிங்கம் என்கிளைவ், 8வது தெருவில் குடும்பத்துடன் வசித்து வருவதாக தெரிவித்தார். 3) அதனை தொடர்ந்து உதவி செயற்பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு) அவர்களின் அலுவலக அறையின் பக்கத்தில் வணிக ஆய்வாளர் அவர்களின் அலுவலக அறை தெற்கு நோக்கி காணப்படுகிறது. வணிக ஆய்வாளர் அவர்களின் அறையின் உள்ளே நுழைந்ததும், தெற்கு நோக்கி இருக்கையில் காணப்பட்ட நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் பரிமளா என்றும் வணிக ஆய்வாளராக இந்த அலுவலகத்தில் நவம்பர்-2021 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது கைப்பையில் இருந்து சொந்த பணம் என பணம் ரூ.250/- (Rs.100X1; Rs.50X3) எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் உதவி செயற்பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு) அலுவலகத்தின் வணிக ஆய்வாளர் அவர்களின் அலுவலக அறை முழுவதும் சோதனை மேற்கொள்ளப்பட்டதில் பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

4) அதனை தொடர்ந்து உதவி பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு) அவர்களின் அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும், கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் செல்வராஜ் என்றும் இந்த அலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதும், பதற்றமடைந்த அவர் சற்று யோசித்தவாறு, தனது பேண்ட் பாக்கெட்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எடுத்து எண்ணி பார்த்தபோது பணம் ரூ.4500/- (Rs.500X9) இருந்தது. தொடர்ந்து அவர் தனது பேண்ட் பாக்கெட்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணி பார்த்தபோது பணம் ரூ.5200/- (Rs.500X9; Rs.200X1; Rs.20X3; Rs.10X4) இருந்தது. இந்த பணம் குறித்து வணிக ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவர்களிடம் கேட்டபோது பதற்றமடைந்தவாறு தனது சொந்தபணம் என தெரிவித்தார். ஆனால் அந்த பணத்திற்கான எந்த ஒரு ஆதாரமும் சமர்ப்பிக்கவில்லை என்பதாலும் மற்றும் சொந்தபணமாக இருந்தால், அந்த பணத்தை இடது பக்க பாக்கெட் மற்றும் வலது பக்க பாக்கெட் என இரண்டிலும் பிரித்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே அந்த பணம் ரூ.9700/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 5) தொடர்ந்துஉதவி பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு) அவர்களின் அலுவலக அறையில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் Hemalatha என்றும், இந்த அலுவலகம் சென்னை நங்கநல்லூர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகத்தின் உதவி பொறியாளராக (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு) பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதும், அவர், மருத்துவ சிகிச்சைக்காக பணம் வைத்திருப்பதாக கூறி தனது கைப்பையில்

இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எடுத்து எண்ணி பார்த்தபோது பணம் ரூ.6900/- (Rs.500X15; Rs.200X2) இருந்தது. இந்த பணம் குறித்து உதவி பொறியாளர் அவர்களிடம் கேட்டபோது பதற்றமடைந்தவாறு, அவர் 21.08.2026ந்தேதி TNSC Bank சென்னை ஆதம்பாக்கம் கிளையில் தனது தங்க நகைகளை அடமானம் தொடர்பாக பெறப்பட்ட பணம் ரூ.10,227/-யில் செலவினம் போக பணம் ரூ.6900/- வைத்திருப்பதாக கூறினார். அவரது விளக்கம் தொடர்பாக அவரது செல்போன் எண்ணிற்கு வந்த குறுஞ்செய்தி மூலம் அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.6900/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. தொடர்ந்து உதவி பொறியாளர் அவர்களின் அலுவலக அறையில் உள்ள டேபிள் டிராயர்கள், மற்றும் இரும்பு பீரோ ஆகியவற்றிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டதில் பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் உதவி பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு) அவர்களின் அலுவலகத்தில் மற்றொரு சிறிய கேபின் அறையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் தியானஸ்வரன் என்றும் இந்த அலுவலகத்தில் போர்மேன் ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது, அவர் தனது பாக்கெட்டில் இருந்த பர்ஸிலிருந்து தனது சொந்தபணம் என ரூ.450/- (Rs.100X4; Rs.50X1) எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்று கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.450/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் உதவி பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு) அவர்களின் அலுவலக அறையை தொடர்ந்து, பொதுமக்களிடமிருந்து EB Bill collection counter கிழக்கு நேர்க்கி காணப்படுகிறது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை சோதனையின் முடிவில் மொத்த பணம் ரூ.59,700/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சென்னை-61, நங்கநல்லூர், 100 அடி சாலை, சங்கர் கண்

மருத்துவமனை மற்றும் இந்து மிஷன் மருத்துவமனை அருகில் இயங்கி வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (33/11 KV Sub-Station) அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் வருகைப் பதிவேடுகள் விவரங்கள் பின்வருமாறு : 2026-2027 வருகை பதிவேடு உ.செ.பொ/இ&ப நங்கநல்லூர் வருகை பதிவேடு (3 sheets), மற்றும் உ.மி.பொ/இ&ப நங்கநல்லூர் வருகை பதிவேடு (7 sheets) ஆகியவற்றை இன்றைய தேதியில் (24.08.2026ந்தேதி) பதிவேட்டின் நகல் எடுத்தும் அதில் உதவி செயற்பொறியாளர் (இயக்குதலும் மற்றும் பராமரிப்பு), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நங்கநல்லூர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டது. இந்த இருதுறை கூட்டு தணிக்கையின்போது இந்த அலுவலகத்தில் உள்ள எந்த ஒரு ஆவணங்களுக்கும் எந்த வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும் அலுவலகத்தின் அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ இடையூறு ஏற்படுத்தப்படவில்லை. இந்த திடீர் சோதனை 24.08.2026-ந்தேதி மாலை 4.00 மணிக்கு தொடங்கி இரவு 8.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| ஓப்பம்xxx 24/8/2026<br>திரு.சாமி,<br>துணை வட்டாட்சியர்,<br>தனி மாவட்ட வருவாய்<br>அலுவலர் (நிலம் எடுப்பு)<br>அலுவலகம், மாநில<br>நெடுஞ்சாலைகள்,<br>செங்கல்பட்டு மாவட்டம் | ஓப்பம்xxx 24/08/2026<br>திரு.சு.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சென்னை நகரப்பிரிவு-3,<br>ஊழல் தடுப்பு மற்றும்<br>கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர்,<br>சென்னை - 600 016. | ஓப்பம்xxx 24.08.2026<br>திரு.ஆர்.மூர்த்தி,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>சென்னை நகரப்பிரிவு-3,<br>ஊழல் தடுப்பு மற்றும்<br>கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர்,<br>சென்னை - 600 016. |

ஒப்பம்xxx 24/8/2026

திரு.காளிதாஸ்,
உதவி செயற்பொறியாளர்,
இயக்குதலும் மற்றும் பராமரிப்பு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம்,
நங்கநல்லூர், சென்னை-61

ஒப்பம்xxx 24/8/2026

திருமதி.ஹேமலதா,
உதவி பொறியாளர்,
இயக்குதலும் மற்றும் பராமரிப்பு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம்,
நங்கநல்லூர், சென்னை-61

ஒப்பம்xxx 24/8/2026

திரு.செல்வராஜ்,
வணிக ஆய்வாளர்,
உதவி பொறியாளர்,
இயக்குதலும் மற்றும் பராமரிப்பு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம்,
நங்கநல்லூர், சென்னை-61

I am registering a case in V&AC Chennai City-III Crime No.02/AC/2026/CC-III U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 and Section 106 of BNSS (Section 102 Cr.P.C.) against the Accused A-1 and A-2 on 25.08.2026 at 13.30 hrs. The original complaint and FIR is forwarded to the Hon'ble Principal District Sessions Judge, Principal District Sessions Court, Chengalpattu for the cases under Prevention of Corruption Act and copies of FIR to the officers concerned.

25.08.2026

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016